# அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி)

## கோயமுத்தூர் – 18

BA., தமிழ் முதலாமாண்டு

இலக்கணம் – நன்னூல்

முதற்பருவம் – 18 BTA 13C

அலகு - 2

## எழுத்தியல்

தயார் செய்தவர்: சி. சித்ராமணி

துறை: தமிழ்த்துறை

அலைபேசி: 9842254495

# அ. எழுத்து

## மொழி :

ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாழும் மக்கள் தம் கருத்துகளை மற்றவர்க்கு வெளிப்படுத்தப் பயன்படும் கருவி மொழி எனப்படும்.

## எழுத்து :

மொழி அமையக் காரணமாக அமையும் ஒலி அமைப்பு எழுத்து எனப்படும். இஃது, எழுதப்படும் போது வரி வடிவமும், சொல்லப்படும் போது ஒலி வடிவமும் என இரு வகை வடிவங்களை உடையது.

## தமிழ் எழுத்துகள் :

'அ' முதல் 'ஔ' வரை உள்ள பன்னிரண்டு உயிர் எழுத்துகளும், 'க்' முதல் 'ன்' வரை உள்ள பதினெட்டு மெய் எழுத்துகளும் எனத் தமிழில் முப்பது எழுத்துகள் உள்ளன.

## முதல் எழுத்துகள் :

உயிர் எழுத்துகளும் மெய் எழுத்துகளும் முதல் எழுத்துகள் எனப்படுகின்றன. ஏனெனில், இவை மொழிக்கு அடிப்படையாகவும் உயிர் முதலிய சார்பெழுத்துகள் தோன்றக் காரணமாகவும் அமைந்துள்ளன.

## சார்பெழுத்துகள் :

தம்முடைய தோற்றத்திற்கும் வழக்கிற்கும் (usage) முதல் எழுத்துகளைச் சார்ந்துள்ளவை சார்பெழுத்துகள் எனப்படுகின்றன.

## சார்பெழுத்துகளின் வகைகள் :

உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் என்னும் பத்தும் சார்பெழுத்துகளின் வகைகளாகும்.

## மாத்திரை :

எழுத்துகள் ஒலிக்கப்படுவதற்கு ஆகும் கால அளவு மாத்திரை என்னும் அலகால் (unit) குறிக்கப்படுகின்றது.

ஒருமுறை, இயல்பாக கண் இமைக்கின்ற நேரம் அல்லது கை நொடிக்கின்ற நேரம் மாத்திரை எனப்படும்.

## உயிரெழுத்துகளின் வகைகள் :

உயிரெழுத்துகள் அவற்றை ஒலிப்பதற்காகும் கால அளவைக் கொண்டு குறில், நெடில் என இரண்டு வகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

## குறில் :

ஒரு மாத்திரை உடைய அ, இ, உ, எ, ஒ, என்னும் ஐந்து உயிரெழுத்துகளும் குறில் எழுத்துகள் எனப்படுகின்றன.

## நெடில் :

இரண்டு மாத்திரை உடைய ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழு எழுத்துகளும் நெடில் எழுத்துகள் எனப்படும்.

## உயிரெழுத்துகளின் இனவகை :

உயிரெழுத்துகள் (அ, ஆ), (இ, ஈ), (உ, ஊ), (எ, ஏ) (ஐ, இ), (ஒ, ஓ), (ஔ, உ) என்றவாறு இனப்படுத்தப் பட்டுள்ளன.

## மெய்யெழுத்துகளின் வகைகள் :

மெய்யெழுத்துகள் வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்று வகைப்படும்.

**மெய்யெழுத்தின் மாத்திரை :**

மெய்யெழுத்து அரை மாத்திரை பெறும்.

**வல்லின எழுத்துகள் :**

வல்லோசை உடைய க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறும் வல்லின எழுத்துகள் எனப்படுகின்றன.

**மெல்லின எழுத்துகள் :**

ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் ஆறும் மெல்லோசை உடைய காரணத்தால் மெல்லின எழுத்துகள் எனப்படுகின்றன.

**இடையின எழுத்துகள் :**

ய், ர், ல், வ், ழ், ள், என்னும் ஆறும் வல்லோசைக்கும் மெல்லோசைக்கும் இடைப்பட்ட ஓசை கொண்டுள்ளன. எனவே, இவை இடையின எழுத்துகள் எனப்படுகின்றன.

**மெய்யெழுத்துகள் - இனவகை :**

மெய்யெழுத்துகளுள் வல்லின மெல்லின எழுத்துகள் (க், ங்) (ச், ஞ்) (ட், ண்) (த், ந்) (ப், ம்) (ற், ன்) என்றவாறு அவற்றின் பிறப்பிடம் நோக்கி இனப்படுத்தப்பட்டுள்ளன.

இடையின மெய்கள் ஆறும் இனமாகக் கொள்ளப் படும்.

**மெய்யெழுத்தின் பிற பெயர்கள் :**

மெய்யெழுத்து உடம்பு, ஒற்று, புள்ளி என்னும் பெயர் களிலும் வழங்கப்படும்.

**சார்பெழுத்துகள் :**

தம்முடைய தோற்றத்திற்கும், வழக்கிற்கும் (usage) முதல் எழுத்துகளைச் சார்ந்துள்ளவை சார்பெழுத்துகள் எனப்படுகின்றன.

## சார்பெழுத்துகளின் வகைகள் :

உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் என்னும் பத்தும் சார்பு எழுத்துகள் எனப்படும்.

## உயிர்மெய் எழுத்துகள் :

மெய்யெழுத்துடன் உயிரெழுத்து சேர்வதால் அமைவது உயிர்மெய் எழுத்து எனப்படும்.

உயிர்மெய் எழுத்திற்கு அதில் உள்ள உயிரெழுத்தின் மாத்திரை சொல்லப்படும்.

காட்டு : க் + அ = க (1 மாத்திரை)
க் + ஆ = கா (2 மாத்திரை)

## உயிர்மெய் எழுத்துகளின் எண்ணிக்கை :

ஒவ்வொரு உயிரும் ஒவ்வொரு மெய்யுடன் தனித் தனியே சேர மொத்தம் இருநூற்றுப்பதினாறு உயிர்மெய் எழுத்துகள் உள்ளன.

## உயிர்மெய்க்குறில் :

குறிலுயிர் மெய்யுடன் சேர்வதால் அமையும் உயிர் மெய் உயிர்மெய்க்குறில் எனப்படும்.

உயிர்மெய்க்குறில் குறிலுயிர் போன்றே ஒரு மாத்திரை பெறும்.

## உயிர்மெய் நெடில் :

நெடிலுயிர், மெய்யுடன் சேர்வதால் அமையும் உயிர் மெய் உயிர்மெய் நெடில் எனப்படும். உயிர்மெய்நெடில், நெடிலுயிர் போன்றே இரண்டு மாத்திரை பெறும்.

## ஆய்தம் :

மூன்று புள்ளியின் வடிவாக உள்ள ஆய்த எழுத்து குறில் எழுத்தை அடுத்தும், வல்லின உயிர்மெய்க்கு முன்பாகவும் இடம்பெறும். ஆய்த எழுத்திற்கு அரை மாத்திரை சொல்லப்

படும். அரை மாத்திரை கொண்ட நிலையிலுள்ள ஆய்த எழுத்தை முற்றாய்தம் என்றும் சொல்வர்.

காட்டு : அஃது, எஃது, கஃசு, பஃறி.

## ஆய்த எழுத்தின் தனித் தன்மைகள் :

ஆய்த எழுத்து தனித்து இயங்காது; ஒரு சொல்லின் முதலிலோ முடிவிலோ அமைவதில்லை; சொற்களின் இடையில் மட்டுமே வரும். தமிழில் இயல்பாக ஒலிக்க இயலாத சில ஒலிகளைத் தோற்றுவிக்க ஆய்த எழுத்து பயன்படுவதும் உண்டு. (ஃபேன், காஃபி, ஃபோன்)

## ஆய்த எழுத்தின் பிற பெயர்கள் :

ஆய்த எழுத்து முப்புள்ளி, முப்பாற்புள்ளி, தனிநிலை, அஃகேனம் என்றும் வழங்கப்படும்.

## அளபெடை :

செய்யுளின் ஓசை குறையும் இடங்களில் அக்குறையை நிறைவு செய்கின்ற வகையில் எழுத்துகள் தமக்குரிய மாத்திரையைக் காட்டிலும் மிக்கு ஒலிப்பது அளபெடை எனப்படும்.

## அளபெடையின் வகைகள் :

அளபெடை உயிரளபெடை, ஒற்றளபெடை என இரண்டு வகைப்படும்.

## உயிரளபெடை :

உயிர் எழுத்து அளபெடுப்பது உயிரளபெடை.

## ஒற்றளபெடை :

மெய் எழுத்து அளபெடுப்பது ஒற்றளபெடை எனப்படும். ஆய்தம் அளபெடுப்பதும் ஒற்றளபெடை எனப்படும்.

## உயிரளபெடையின் வகைகள் :

உயிரளபெடை செய்யுளிசை அளபெடை, இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை என்னும் மூன்று வகைப்படும்.

## செய்யுளிசை அளபெடை :

செய்யுளில் ஏற்பட்ட இலக்கணக் குறையை நிறைவு செய்யும் வகையில் வரும் அளபெடை செய்யுளிசை அளபெடை எனப்படும்.

செய்யுளிசை அளபெடை, இசைநிறை அளபெடை என்றும் வழங்கப்படும். இது சொல்லின் முதல், இடை, கடை என்னும் மூன்று இடங்களிலும் வரும்.

காட்டு : ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

இக்குறட்பாவில் 'உழார்' என்னும் சொல் இயல்பாக வந்தால் செய்யுள் இலக்கணம் பிழைபடும். எனவே, அந்தப் பிழை நேராதிருக்க, அச்சொல் 'உழாஅர்' என்றவாறு அளபெடையுடன் வந்தது.

## இன்னிசை அளபெடை :

செய்யுளில் ஓசை குறையாத (இலக்கணம் பிழைபடாத) இடங்களிலும் இனிய இசை கருதி அளபெடுப்பது இன்னிசை அளபெடை எனப்படும்.

காட்டு : கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்
மற்றாங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை

இக்குறட்பாவில் 'கெடுப்பதும்' 'எடுப்பதும்' என்னும் சொற்கள் இயல்பாக வந்தாலும் செய்யுள் இலக்கணம் பிழை படுவதில்லை. ஆனால் அவை முறையே 'கெடுப்பதூஉம்' 'எடுப்பதூஉம்' என்றவாறு, இன்னிசை கருதி அளபெடுத்து வந்துள்ளன.

## சொல்லிசை அளபெடை :

சொல்லின் பொருள் நிலையை மாற்றித் தரும் வகையில் அளவெடுப்பது சொல்லிசை எனப்படும்.

காட்டு : உரனசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரனசைஇ இன்னு முளேன்.

இக்குறட்பாவில் 'விருப்பம்' என்னும் பொருள் தரும் 'நசை' என்னும் சொல் 'விரும்பி' என்னும் வினையெச்ச

பொருளைத் தருவதற்காக 'நசைஇ' என்றவாறு அளபெடுத்துள்ளது.

## ஒற்றளபெடை :

செய்யுளில் ஓசை குறையும் இடங்களில் ங், ஞ், ண், ந், ம், வ், ய், ல், ள் என்னும் பத்து மெய் எழுத்துகளும் (மெல்லினம் ஆறும் இடையினத்தில் ர, ழ ஒழிந்த நான்கும்) ஆய்த எழுத்தும் அளபெடுத்து வருவது ஒற்றளபெடை எனப்படும். (வல்லின மெய்களும், ர், ழ் என்னும் இடையின மெய்களும் அளபெடுக்க மாட்டா.)

தனிக்குறிலையும், குறில் இணையையும் (இரண்டு குறில் இணைந்து வருவது) அடுத்து ஒற்றளபெடை இடம் பெறும். மெய்யெழுத்துகள் சொல்லின் இடை, கடை என்னும் இரண்டு இடங்களிலும் அளபெடுக்கும். ஆய்த எழுத்து சொல்லின் இடையில் மட்டும் அளபெடுக்கும்.

ஒற்றெழுத்து அளபெடுத்ததற்கு அடையாளமாக வேண்டிய அளவு அதுவே சேர்த்து எழுதப்படும்.

காட்டு : எங்ங்கிறைவன்............
இலங்ங்கு வெண்பிறை...........
பொன்ன் பொறி சுணங்கு
மல்ல்லிகை என் மன்னன்ன் மயங்கும்
இலஃஃகு முத்து
எஃஃகிலங்கிய கையராய்

## அளபெடைக்கு அடையாளம் :

i) நெடில் எழுத்து அளபெடுக்கும் போது அதனருகில் அதன் இனக்குறில் சேர்த்து எழுதப்படும் (ஆ,அ ஈஇ, ஊஉ, ஏஎ, ஐஇ, ஓஒ, ஔஉ)

ii) குறில் எழுத்து அளபெடுக்கையில் அஃது அதனுடைய நெடிலாக நீட்டப் பெற்று அதுதானும் சேர்த்து எழுதப்படும் (அ→ஆஅ, இ→ஈஇ, உ→ஊஉ, எ→ஏஎ, ஒ→ஓஒ)

iii) ஒற்றெழுத்து அளபெடுக்கையில் அது தானே வேண்டிய அளவு சேர்த்து எழுதப்படும்.

## இயற்கை அளபெடை :

சில சொற்கள் இயல்பாகவே அளபெடுத்த அமைப்பினை உடையனவாக உள்ளன. இவ்வாறு, அளபெடை சொல்லில் இயல்பாக அமைந்து வருவது இயற்கை அளபெடை எனப் படும்.

காட்டு : ஆடூஉ முன்னிலை; குழூஉக் குறி;
மகடூஉ முன்னிலை; மரூஉ மொழி

## குற்றியலுகரம் :

ஒரு சொல்லின் இறுதியில், உகரம் தனக்குரிய ஒரு மாத்திரையிலிருந்தும் குறுகி அரை மாத்திரையாக ஒலிப்பது குற்றியலுகரம் எனப்படும்.

நெட்டெழுத் திம்பரும் தொடர்மொழி ஈற்றும்
குற்றியலுகரம் வல்லா றூர்ந்தே.

நெடில் எழுத்தை அடுத்தும், தொடர்மொழியின்* இறுதியிலும் வல்லின மெய்யெழுத்துடன் வரும் உகரம் குற்றியலுகரமாகும்.

## குற்றியலுகரத்தின் வகைகள் :

குற்றியலுகரம் தனக்குமுன் இடம் பெறும் எழுத்தைக் கொண்டு ஆறு வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

அவை i) நெடில் தொடர்க் குற்றியலுகரம்
ii) வன்தொடர்க் குற்றியலுகரம்
iii) மென்தொடர்க் குற்றியலுகரம்
iv) இடைத்தொடர்க் குற்றியலுகரம்
v) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்
vi) ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்

என்பவை.

## நெடில் தொடர்க் குற்றியலுகரம் :

நெடில் எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் நெடில் தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

---

*இரண்டிற்கு மேற்பட்ட எழுத்துகளால் அமையும் சொல்.

காட்டு : பாகு, காசு, நாடு, காது, ஆறு

(நெடில் தொடர்க் குற்றியலுகரத்தை உயிர்த் தொடர்க் குற்றியலுகரம் என்று கூறலாகாது). நெடில் தொடர்க் குற்றியலுகரச் சொல் ஈரெழுத்தே பெறும் தன்மைத்து. (ஏழு-என்பதில் 'ழு' குற்றியலுகரமாகாது; அது முற்றுகரம்)

## வன்தொடர்க் குற்றியலுகரம் :

வல்லின மெய்யை அடுத்து வரும் குற்றியலுகரம் வன்தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

காட்டு : பாக்கு, அச்சு, எட்டு, பத்து, காப்பு, காற்று, வாய்ப்பு.

## மென்தொடர்க் குற்றியலுகரம் :

மெல்லின மெய்யைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் மென்தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

காட்டு : சங்கு, பஞ்சு, வண்டு, பந்து, அம்பு, கன்று, சான்று.

## இடைத்தொடர்க் குற்றியலுகரம் :

இடையின மெய்யைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் இடைத்தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

காட்டு : மார்பு, சால்பு, இயல்பு, தெள்கு.

## உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் :

தொடர்மொழியின் இறுதியில் உயிர்மெய்யை அடுத்து வரும் குற்றியலுகரம் உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

காட்டு : வரகு, பரிசு, முகடு, எளிது, மரபு, தவறு, தராசு.

உயிர்மெய்யை ஈற்றயலாகக் கொண்டுவரினும் ஈற்றய உயிர்மெய் முதலாகவும், உயிர் யெழுத்தைப் பிரிக்கும் போது மெய் முதலாகவும், உயிர்

ஈறாகவும் நிற்றலின் உயிர் ஈற்றயலாகக் கொள்ளப்பட்டு உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் எனப்பட்டது.

உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் மூன்று எழுத்துகளாலும் அதற்கு மேற்பட்டுமே அமையும் சொற்களில் வரும்.

(பசு—என்பதில் 'சு' குற்றியலுகரம் ஆகாது, அது முழுமையான உகரமாகும்—முற்றுகரம் ஆகும்.)

## ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் :

ஆய்த எழுத்தை அடுத்து வரும் குற்றியலுகரம் ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

காட்டு : எஃகு, கஃசு, இஃது.

## குற்றியலிகரம் :

இகரம் தனக்குரிய ஒரு மாத்திரையிலிருந்தும் அரை மாத்திரையாகக் குறுகி ஒலிப்பது குற்றியலிகரம் எனப்படும்.

i) மியா என்னும் அசை*ச் சொல்லில் யகரத்தின் மூன்பாக மகரத்துடன் வரும் இகரம் குற்றியலிகரமாகும்.

கேண்மியா, சென்மியா, (கேள், செல்)

ii) வருமொழி முதலில் 'யகரம்' வரும்போது நிலைமொழி** இறுதியில் நின்ற குற்றியலுகரம், குற்றியலிகரமாகத் திரியும்.

காட்டு : நாடு + யாது = நாடியாது
கொக்கு + யாது = கொக்கியாது

---

*அசை-பொருள் தராது வரும் சொல்

**இரண்டு சொற்கள் அடுத்தடுத்து வருகையில் முதல் சொல் நிலைமொழி என்றும் இரண்டாம் சொல் நிலைமொழியுடன் வந்து சேரும் சொல், வருமொழி என்றும் சொல்லப்படும்.

## ஐகாரக் குறுக்கம் :

'ஐ' என்னும் எழுத்து, தன்னைக் குறித்து, தன் பெயரைச் சொல்லும் போது மட்டுமே முழுமையாக இரண்டு மாத்திரை பெறும். அது சொல்லின் முதல், இடை, கடை என்னும் மூன்று இடங்களிலும் வருகையில் ஒரு மாத்திரை பெற்று ஐகாரக் குறுக்கம் எனப்படும்.

காட்டு : ஐப்பசி, மையல், பகைவர், இடையன், குவளை, முல்லை, பிச்சை, வகை.

## ஔகாரக் குறுக்கம் :

'ஔ' என்னும் எழுத்து, தன்னைக் குறித்து, தன் பெயரைக் குறிக்கும் போது மட்டுமே முழுமையாக இரண்டு மாத்திரை பெறும். அது சொல்லின் முதலில் ஒரு மாத்திரை பெற்று வந்து ஔகாரக் குறுக்கம் எனப்படும். (ஔகாரம் சொல்லின் இடையிலும் கடையிலும் வராது.)

காட்டு : மௌவி, ஔவையார், மௌனம்.

## மகரக் குறுக்கம் :

மகர மெய் தனக்குரிய 'அரை' மாத்திரையிலிருந்தும் குறுகிக் கால் மாத்திரையாக ஒலிப்பது மகரக் குறுக்கம் எனப்படும். ணகர, னகர மெய்களை அடுத்து வரும்போதும், நிலைமொழி இறுதியில் நிற்கையில், வருமொழி முதலில் வகரம் வரும்போதும் மகரம் குறுகும்.

காட்டு : கொண்ம்(=கொள்ளும்), மருண்ம்(=மருளும்) போன்ம்(=போலும்), வரும்வழி.

## ஆய்தக் குறுக்கம் :

தனிக் குறிலை அடுத்து வரும் ல், ள் என்பவற்றை இறுதியிலுடைய சொற்களுடன், தகரத்துடன் தொடங்கும் வருமொழிகள் வந்து சேரும் பொழுது, நிலைமொழி இறுதி மெய்கள் ஆய்தமாகத் திரியும். இந்த ஆய்தம், ஆய்தக் குறுக்கமாகும். ஆய்தக் குறுக்கம் 'கால்' மாத்திரை பெறும்.

காட்டு: அல் + திணை - அஃறிணை ; முள் + டீது - முஃடீது;
கல் + தீது - கஃறீது.

## சுட்டு

பொருட்களின் அண்மை, சேய்மைகளைக் குறிப்பது சுட்டு எனப்படும்.

### சுட்டெழுத்துகள்:

அ, இ, உ என்னும் எழுத்துகள், சுட்டுப் பொருளைத் தந்து, சொற்களின் முதலில் இடம் பெறுகையில் சுட்டெழுத் துகள் எனப்படுகின்றன. இவற்றுள் 'அ' தொலைவில் (சேய்மையில்) உள்ளத்தைச் சுட்டும் சேய்மைச் சுட்டு; 'இ' அருகில் (அண்மையில்) உள்ளதைச் சுட்டும் அண்மைச் சுட்டு; 'உ' என்னும் சுட்டு தற்காலத்தில் வழக்கில் இல்லை.

### சுட்டு வகைகள்:

சுட்டெழுத்துகள் சொல்லில் இடம் பெறுவதைப் பொறுத்து அகச்சுட்டு, புறச்சுட்டு எனச் சுட்டு இரு வகைப்படும்.

### அகச் சுட்டு:

சுட்டெழுத்து சொல்லுக்குள் அமைந்து நின்று சுட்டுப் பொருளைத் தருவது அகச்சுட்டு எனப்படும்.

அகச்சுட்டில் சுட்டெழுத்தை நீக்கிவிட்டால் சொல் லுக்கு உரிய பொருள் இராமற் போகும்.

காட்டு : அவன், அவள், அவர், அது, அவை
இவன், இவள், இவர், இது, இவை

### புறச்சுட்டு:

சுட்டெழுத்து சொல்லின் வெளியே நின்று சுட்டுப் பொருளைத் தருமாறு அமைவது புறச்சுட்டு எனப்படும். இதில் சுட்டெழுத்து நீக்கப்படினும் எஞ்சுவது, குறித்த பொருள் உடைய சொல்லாகவே இருக்கும்.

காட்டு : அவ்வீடு, அம்மலர், இச்சிறுவன், இக்குளம்.

## வினா எழுத்துகள் :

எ, யா, ஆ, ஓ, ஏ என்பவை வினாப்பொருளைத் தருமாறு வருகையில் வினா எழுத்துகள் எனப்படுகின்றன. இவற்றுள் எ, யா என்பவை சொல்லின் முதலிலும் (என்ன, யார்) ஆ, ஓ என்பவை சொல்லின் இறுதியிலும் (அவனா, அவனோ) 'ஏ' என்பது முதல், இறுதி என்னும் இரு நிலைகளிலும் (ஏன், அவனே) வினா எழுத்துகளாக அமையும்.

'ஏ' என்னும் வினா எழுத்து, செய்யுளில் மட்டுமே சொல்லின் இறுதியில் வரும்; உரைநடையில் வராது.

காட்டு : அதுவன்றே நாய் பெற்ற தெங்கம்பழம்.

## வினா வகைகள் :

வினாவும், சுட்டைப் போலவே சொற்களில் வினா எழுத்துகள் இடம் பெறுவதைக் கொண்டு அகவினா, புறவினா என இரு வகைப்படும்.

## அகவினா :

வினா எழுத்து சொல்லுக்குள் அமைந்து நின்று, வினாப் பொருளைத் தருவது அகவினா எனப்படும். அகவினாவில் வினா எழுத்தை நீக்கிவிட்டால் சொல் பொருளற்றுப் போகும்.

காட்டு : என்ன, யாவர், ஏன், எங்கே, எது, எவை.

## புறவினா :

வினா எழுத்து சொல்லுக்கு வெளியே நின்று, வினாப் பொருளைத் தருமாறு அமைவது புறவினா எனப்படும். இதில் வினா எழுத்தை நீக்கினும், எஞ்சுவது, குறித்த பொருள் தரும் சொல்லாகவே இருக்கும்.

காட்டு : எவ்வீடு, வந்தாயோ, கள்வனோ, யானோ, அவனே.

## எழுத்துப் போலி

ஓர் எழுத்து இடம் பெற வேண்டிய இடத்தில், மற்றோர் எழுத்து இடம் பெற்று, அஃது இலக்கண நூலோரால் ஏற்றுக் கொள்ளப்படுவது எழுத்துப்போலி எனப்படும்.

எழுத்துப்போலி, சொல்லில் அமையும் இடத்தின் அடிப்படையில் முதற்போலி, இடைப்போலி, கடைப்போலி என்று மூன்று வகைப்படும்.

### முதற் போலி :

ஒரு சொல்லின் முதலில் எழுத்துப்போலி இடம் பெறுவது முதற்போலி எனப்படும். ச், ஞ், ய் என்பவற்றுக்கு முன் இடம் பெறுகையில் அ, ஐ என்பவை ஒன்றுக்கொன்று போலியாக சொல்லின் தொடக்கத்தில் வரும்.

காட்டு : பசல்—பைசல் மஞ்சு—மைஞ்சு
மயல்—மையல்

### இடைப்போலி :

ஒரு சொல்லின் இடையில் எழுத்துப்போலி இடம் பெறுவது இடைப்போலி எனப்படும்.

1. சொல்லின் இடையில் ச், ஞ், ய் என்பவற்றுக்கு முன் இடம் பெறுகையில் அ, ஐ என்பவை ஒன்றுக்கொன்று போலியாக வரும்.

காட்டு : அமச்சு — அமைச்சு இலஞ்சி — இலைஞ்சி
சமயல் — சமையல் அரயர் — அரையர்

2. 'ஐ' 'ய்' என்பவற்றை அடுத்து சொல்லின் இடையில் வருகையில் 'ந்' 'ஞ்' என்பவை ஒன்றுக்கொன்று போலியாக வரும்.

காட்டு : ஐந்நூறு—ஐஞ்நூறு; செய்ந்நின்ற—செய்ஞ்ஞின்ற; சேய்நலூர்—சேய்ஞலூர்.

## கடைப்போலி அல்லது மொழி இறுதிப்போலி :

சொல்லின் இறுதியில் எழுத்துப்போலி இடம் பெறுவது கடைப்போலி எனப்படும்.

பால்பகா அஃறிணைப் பெயர்களின் இறுதியில் மகரமும் னகரமும் ஒன்றுக்கொன்று போலியாக வரும்.

காட்டு : மனம்—மனன் குணம்—குணன்
நிலம்—நிலன்

## மேலும் கொள்ளத்தக்க எழுத்துப்போலிகள் :

கடைப்போலி : வண்டு—வண்டர் பந்தல் — பந்தர்
சுரும்பு—சுரும்பர்.

முதற்போலி : நயம்—ஞயம் நாஞ்சில் — ஞாஞ்சில்
நேயம்—ஞேயம்.

## வினாக்கள்

### 2 மதிப்பெண்கள்

1. சார்பெழுத்து எத்தனை வகைப்படும்?
2. மாத்திரை என்றால் என்ன?
3. அளபெடை குறிப்பு வரைக?

### 5 மதிப்பெண்கள்

1. குற்றியலுகரத்தை விளக்கி, வகைகளை சான்றுடன் நிறுவுக.
2. போலி குறித்து எழுதுக.
3. மகரக் குறுக்கத்தை சான்றுடன் விளக்குக.

### 10 மதிப்பெண்கள்

1. பிறப்பின் பொது இலக்கணம் குறித்து கட்டுரை வரைக.
2. மொழிக்கு முதலிலும் இறுதியிலும் வரும் எழுத்துக்கள் குறித்து விளக்குக.

அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி)

கோயமுத்தூர் - 641 018

B.A. தமிழ் - முதலாமாண்டு

இலக்கணம் - நன்னூல்

முதற்பருவம் - 18 BTA 13C

அலகு - 2 (பகுதி - 2)

பதவியல்


பெயர் : மு. ஜோதி

துறை : தமிழ்த் துறை

அலைபேசி : 94871 93006

## அலகு - 2 பதவியல்

<u>பதம்:</u> எழுத்து தனித்தோ, சில எழுத்துகள் தொடர்ந்தோ வந்து பொருள் தருமாயின் அது பதம் எனப்படும்.

<u>பதம் இரண்டு வகைப்படும்:</u>

<u>1. பகுபதம்:</u> சொல்லைப் பகுத்துப் பொருள்தரும் நிலையில் இருந்தால் அது பகுபதம். இருபது எழுத்துக்கள் வரை பகுபதங்கள் வரும்.

<u>2. பகாபதம்:</u> பொருள் தரும் வகையில் பகுக்க முடியாதது பகாப்பதம்.

<u>பகுபத உறுப்புகள்:</u> 6

1. பகுதி 2. விகுதி 3. இடைநிலை
4. சாரியை 5. சந்தி 6. விகாரம்.

<u>1. பகுதி:</u> பகுக்கும் பதங்களாக வரும் பெயர்களிலும் வினைகளிலும் அவற்றின் முன்னுள்ள பகுக்கமுடியாததே பகுதியாகும்.

<u>பண்புப் பகுதிகள்:</u> செம்மை முதலாக சிறுமை, சேய்மை, தீமை, வெம்மை, புதுமை, மென்மை, மேன்மை, திண்மை, உண்மை, நுண்மை ஈறாகத் தொகுத்துக் கூறப்பட்ட பதினாறு பண்புப் பகுதிகளும் அவற்றின் எதிர்மறைப் பகுதிகளும் இவை போன்ற பிறவும் பகுக்கப்படாத பகாப்பதப் பண்புப் பகுதிகளாகும்.

<u>பண்புப் பகுதியின் விகாரங்கள்:</u> 7

1. ஈறு போதல்
2. இடை உகரம் இய்யாதல்
3. ஆதி நீடல்
4. அடி உகரம் ஐ ஆதல்
5. தன்னொற்று இரட்டல்
6. முன்னின்ற மெய் திரிதல்
7. இன மிகல்

<u>தெரிநிலை – வினைப்படு பகுதிகள்:</u>

நட, வா, மடி, சீ, விடு, கூ, வே, வை, நொ, போ, வெள என்னும் உயிர் ஈற்று வினைப்படு பகுதிகளும் உரிஞ், உண், பொருந், திரும், தின், தேய், பார், செல், வவ், வாழ், கேள் என்னும் மெய் ஈற்று வினைப் பகுதிகளும் அஃகு என்னும் குற்றியலுகர ஈற்று வினைப்பகுதியும் செய் என்னும் வாய்ப்பாட்டு ஏவல் வினைப் பகாபதங்கள் ஆகும்.

<u>ஏவல் வினையில் பிறவினை</u>

பொதுவாக எல்லாத் தெரிநிலை வினைப்பகுதிகளும் ஏவல் பொருளை உணர்த்தும். இவற்றோடு விகுதி சேர்ந்து தன்வினையைப் பிறவினை ஆக்கும்.

தன் செயலை உணர்த்தும் வினையடியோடு வி, பி இணைந்து வரும்போது ஈரேவல் பொருளையும் உணர்த்தும்.

<u>ஓரேவல்</u>: அறிவி, தெரிவி, உண்பி, கொடுப்பி

<u>ஈரேவல்</u>: அறிவிப்பி, தெரிவிப்பி

<u>2: விகுதி</u>: தமிழ் மொழியில் விகுதிகள் முக்கியமான பங்கை வகிக்கின்றன. திணை, பால், எண் இடத்தை உணர்த்துகின்றன. வினையெச்சம், பெயரெச்சம் போன்றவற்றின் விகுதிகளாக வருகின்றன. பல விகுதிகள் பகுதிகளை பெயர்களாக ஆக்குகின்றன.

அன், ஆன் என்னும் ஆண்பால் விகுதிகளும்,
அள், ஆள் என்னும் பெண்பால் விகுதிகளும்
அர், ஆர், ப, மார் என்னும் பலர்பால் விகுதிகளும்

அ, ஆ என்னும் பலவின்பால் விகுதிகளும்

து, று, டு என்னும் ஒன்றன்பால் விகுதிகளும்

கு, டு, து, று, என், ஏன், அல், அன் என்னும் தன்மை, ஒருமை விகுதிகளும், அம், ஆம், எம், ஏம், ஓம், கும், டும், தும், றும் என்னும் தன்மைப் பன்மை விகுதிகளும் ஐ, ஆய், இ என்னும் முன்னிலை ஒருமை விகுதிகளும், மின், இர், ஈர் என்னும் முன்னிலைப் பன்மை விகுதிகளும், ஈயர், க, ய என்னும் வியங்கோள் விகுதிகளும் உம் என்னும் செய்யும் என்று வருதலும் இவை போன்றவையும் வினைமுற்று விகுதிகளாகும். வேற்றுள் சில பெயர்களிலும் விகுதியாக வரும்.

## 3. இடைநிலை

இடைநிலை என்பது பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வரக்கூடிய ஓர் உறுப்பாகும்.

வினைமுற்று, எச்சம் வினையாலணையும் பெயர் போன்றவற்றில் வருவன கால இடைநிலை பெயர்களில் வருபவை எந்தப் பொருளும் உணர்த்தாத இடைநிலைகள்.

காலஇடைநிலைகள் மூன்று வகைப்படும்:

1. இறந்தகால இடைநிலை: த், ட், ற் என்பவையும் இன் என்பதும் ஐம்பால் மூவிடத்திலும் இறந்த காலத்தைக் காட்டும் இடைநிலைகள்.

2. நிகழ்கால இடைநிலை:

ஆநின்று, கின்று, கிறு என்னும் மூன்றும் இடைநிலைகளும் ஐம்பால் மூவிடத்தும் நிகழ்காலத்தை உணர்த்தும்.

3. எதிர்கால இடைநிலை:

ப், வ் என்னும் இரண்டும் ஐம்பால் மூவிடத்திலும் எதிர்காலத்தை உணர்த்தவரும்.

## வடமொழி ஆக்கம்

சமஸ்கிருதம், பிராகிருதம், பாலி என்பவை அனைத்துமே வடமொழி எனப்படுகின்றன. தொடக்கக் காலத்திலிருந்தே தமிழுக்கும் இம்மொழிகளுக்கும் தொடர்பு இருந்து வருகிறது. பழந்தமிழ் மன்னர்களின் ஆட்சிகள் வீழ்ச்சி அடைந்தன. பிற நாட்டவர் ஆதிக்கத்தில் தமிழகம் வந்தபிறகு வடமொழிகளில் குறிப்பாக சமஸ்கிருதம் ஆட்சிமொழியாகத் தகுதிபெற்றது. இதனால் ஆயிரக்கணக்கான சமஸ்கிருதச் சொற்கள் தமிழில் கலக்கத் தொடங்கின.

வடமொழி, தமிழ் பொது உயிர்கள் - 10

| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | ஏ | ஐ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| a | a: | i | i: | u | u: | e: | ai | o: | au |

வட மொழி - தமிழ் சிறப்பு உயிர்கள்

| தமிழ் - 2 | | வட மொழி - 6 | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| எ | ஒ | ru | ru: | lu | lu: | am | aba |

வடமொழி - தமிழ் பொதுமெய்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | க ச ட த ப | k, c, t, t, p | 15 |
| 2. | ங ஞ ண ந ம | ṅ, ṅ, ṅ n, m | |
| 3. | ய ர ல வ | y, r, l, v, ! | |

வட மொழி - தமிழ் சிறப்பு மெய்கள்

**தமிழ் - 3**

ழ ற ன

l r n

**வடமொழி - 22**

$k^h$, g, $g^h$ - க - வருக்கம்

$c^h$, j, $j^h$ - ச - வருக்கம்

$t^h$, d, $d^h$ - ட - வருக்கம்

$t^h$, d, $d^h$ - த - வருக்கம்

$p^h$, b, $b^h$ - ப - வருக்கம்

s, s, sh, ks, kam, kaha

பொது - 15 ; சிறப்பு - 3

மொத்தம் : 18

பொது - 15 ; சிறப்பு = 22

மொத்தம் 37

## வினாக்கள்.

1. பதம் எத்தனை வகைப்படும். அவை யாவை?
2. பகுபத உறுப்புகளைச் சான்றுகளுடன் விளக்குக.
3. பண்புப் பகுதிகளையும் அவை அடையும் விகாரங்களையும் விளக்குக.
4. 'இணையின் ஏ.ரகவர்' விளக்குக.
5. இறப்பு, நிகழ்வு, எதிர்கால இடைநிலைகளை விரிவாக எழுதுக.
6. வடமொழி ஆக்கம் தெரிந்து எழுதுக.